சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள். 21.10.2024
SC.NO. 137/2023
PW11 : Lw11 . கார்த்திக் (வயது 39 ) த/பெ.மாணிக்கம்
(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் முதுநிலை உறைவிட மருத்துவராக பணிபுரிகிறேன். நான் 15.06.2022 அன்று திருச்சி, மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது, இலால்குடி அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்ட கார்த்திக், 31 வயது ஆண், த/பெ. மதியழகன், காளியம்மன் கோவில் தெரு, முள்ளால், இலால்குடியை சேர்ந்த நபரை அவரது உறவினர் விவேகானந்தர் என்பவர் இரவு 10.30 மணிக்கு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதித்த போது தன்னை அடையாளம் தெரியாத ஒரு நபர் கத்தியால் தாக்கியதாக கூறினார். அவரை சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு முகம் மற்றும் நெஞ்சு பகுதியில் சி.டி ஸ்கேன் பார்த்தபோது, இடது மூக்கில் எலும்பு முறிவும், இடது நெஞ்செலும்பு 9 வது எலும்பு முறிவும் இருந்தது. ஒரு வார காலம் சிகிச்சைக்கு பின்பு அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் 21.06.2022 ல் அவரை மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு செய்யப்பட்டது. அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று சேர்ந்து **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயம்பட்ட நபர் சொன்னபடி கத்தியால் தாக்கியதால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார், எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. கத்தியால் குத்தினால் நான் கூறும் எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, வாய்ப்புள்ளது. நான் எடுத்த சிடி ஸ்கேன் எலும்பு முறிவு சம்மந்தமானது என்றால் சரிதான். இடது பக்கத்தில் மூக்கில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், இடது நெஞ்செலும்பு 9 வது எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் காய சான்றில் கூறியுள்ளேன் என்றால்

சரிதான். வேறு எந்த விதமான காயங்களும் ஏற்பட்டதாக எனது காயச்சான்றில் கூறவில்லை என்றால் சரிதான். மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் காயம்பட்ட நபரை சேர்க்கும்போது, விபத்து பதிவேட்டில் மேற்படி காயங்களை பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேடு ஏற்கனவே இலால்குடி அரசு மருத்துவமனையில் முன்னதாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால், மீண்டும் காயங்கள் குறித்து விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை. பொதுவாக எலும்பு முறிவு இரு சக்கர வாகனத்தில் சென்று கீழே விழுந்தாலும், நான் கூறும் எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ signed /
கார்த்திக்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R MOHANA

Digitally signed by R MOHANA
Date: 2024.10.21 18:12:10 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி